TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109500

1. District / மாவட்டம் : திருச்சிராப்பள்ளி  PS / காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year / ஆண்டு: 2023  FIR No. / மு.த.அ. எண்: 08/2023  Date / நாள்: 05.07.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018)  Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 04.07.2023  Date to : நாள் வரை —
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 17.30 hrs  Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.07.2023  Time : நேரம் 08.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —  Time : நேரம் —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்மொழியாக : கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 45 km மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —  District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S. சேசு  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : செபஸ்தியான்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 01.01.1980 (43 வயது)  (d) Nationality : நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் : நகை அடகு  (g) Address : முகவரி : வெள்ளைய கவுண்டம்பட்டி, புத்தாநத்தம் (Po) மணப்பாறை (Tk) திருச்சி (Dt).

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. கோவிந்தசாமி
வணிக வரி அலுவலர்,
மணப்பாறை, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Jesu

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

05/7/23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.07.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A. மரிய சின்னா வெங்கடேசன்
Rank: நிலை காவல் ஆய்வாளர்
உ. த. க. பிரிவு
திருச்சிராப்பள்ளி.

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2023–ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி..**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று **05.07.2023** பணியில் இருந்த போது காலை **08.30** மணியளவில் திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, புத்தாநத்தம் அஞ்சல், வெள்ளையகவுண்டம்பட்டியை சேர்ந்த செபஸ்தியான் மகன் திரு.S.சேசு, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, கரூர் சரகம், மணப்பாறை சர்க்கிள், மணப்பாறை வணிக வரி அலுவலகத்தில், வணிகவரி அலுவலாக பணிபுரியும் திரு.கோவிந்தசாமி மற்றும் புகார்தாரர் திரு.சேசு ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டு, இன்று **05.07.2023** காலை **09.45** மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.**08/2023** சட்டப்பிரிவு **7(a)** ஊழல் தடுப்பு சட்டம் **1988** (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். அப்புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. **05.07.2023** அனுப்புனர் : S.சேசு, த/பெ.செபஸ்தியான், வெள்ளையகவுண்டம்பட்டி, புத்தாநத்தம், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம். பெறுனர் : லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி. அய்யா, நான் திருச்சி மாவட்டம் வெள்ளைய கவுண்டம்பட்டியில் எனது குடும்பத்துடன் சுமார் **40** வருடங்களாக வசித்து வருகிறேன். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் **20** வருடங்களாக மணப்பாறையில் உள்ள ஒரு நகை கடையில் சம்பளத்திற்கு நகை செய்யும் வேலை செய்து வந்தேன். கடந்த **2** வருடங்களாக மணப்பாறை மலையாண்டி தெருவில் சொந்தமாக நகை செய்யும் பட்டறை வைத்து, நகை செய்யும் தொழில் செய்து வருகிறேன். நான் செய்யும் நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை இருந்ததால்தான் எனது நகைகளை விற்பனை செய்ய முடியும். அதற்காக ஹால்மார்க் முத்திரை பயன்படுத்துவதற்கு ஒரு சான்றிதழ் தேவைப்பட்டதால், ஜி.எஸ்.டி. சான்றிதழ் வாங்க வேண்டியிருந்தது. எனவே, எனது தொழிலுக்கு ஜி.எஸ்.டி சான்றிதழ் பெறுவதற்காக கடந்த **25.6.2023** அன்று எனது உறவினர் ஜார்ஜ் ஸ்டீபன் என்பவர் மூலம் எனது விபரங்களை வணிகவரித்துறைக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்திருந்தேன். அதற்கு கட்டணம் எதுவும் கிடையாது. அந்த விண்ணப்பத்தில் எனது ஆன்லைன் மனுவானது ஏற்கப்பட்டு கரூர் சரகம் மணப்பாறை பகுதிக்கு என பதிவாகி ஒரு ஒப்பம் பெற்றேன். அதன்பிறகு, நேற்று **4.7.2023** மதியம் சுமார் **12.00** மணியளவில் மணப்பாறை வணிகவரித்துறை அலுவலகத்திலிருந்து ஒரு நபர் வந்து எனது கடையை பார்வையிட்டு, என்னிடம் சில விபரங்கள் கேட்டுவிட்டு, பின் என்னை ஒரு போட்டோ

எடுத்துக்கொண்டு, நீங்க எங்கள் அலுவலகத்திற்கு சாயந்திரம் வந்து CTO சாரை பாருங்க அவர் மற்ற விபரம் சொல்வார் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். அதனால், நான் நேற்று மாலை சுமார் ஐந்தரை மணியளவில் மணப்பாறை to துவரங்குறிச்சி சாலையில் அமைந்துள்ள மணப்பாறை சர்க்கிள் வணிகவரி அலுவலர் அலுவலகத்திற்கு சென்று CTO திரு.கோவிந்தசாமி சாரை அவரது அறையில் சந்தித்து, எனது ஜி.எஸ்.டி சான்றிதழ் குறித்து கேட்டேன். அதற்கு அவர் எனது பெயர் விபரம் கேட்டுவிட்டு, ஆமாம்பா, உங்க கடைக்கு வெரிபிகேசன் பாத்தாச்சு, எல்லாம் சரியா இருக்கு, இன்னக்கி இல்ல நாளைக்கி உனக்கு ஆன்லைன்ல பதிவுச்சான்றிதழ் அனுப்பிடுவேன், அதனால ரெண்டாயிரம் ரூவா நாளைக்கு கொண்டுவந்து கொடு என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், இந்த சான்றிதழுக்கு பீசெல்லாம் கிடையாதுன்னு சொன்னாங்களே சார் என்று கேட்டேன். அதற்கு அவர் பிஸ் இல்ல, எனக்குதான் வேணும், அதனால ரெண்டாயிரத்த கொடுத்திடு இப்பவே ஆன்லைன்ல உனக்கு சர்ட்டிபிகேட் அனுப்பிடுறேன் என்று சொன்னார். நான் தற்போது பணம் எதுவும் இல்லசார் என்று சொன்னேன். அதனால் அவர், சரிப்பா நாளைக்கு ரெண்டாயிரம் ரூவா கொண்டாந்து கொடுத்திடு, நீ இப்ப கிளம்பு என்று சொன்னார். நான் வேறு வழியில்லாமல் அவரிடம் சரிங்க சார் நாளைக்கு ரெண்டாயிரம் கொண்டுவந்து கொடுத்திடுறேன் என்று சொல்லிவிட்டு அந்த அலுவலகத்தைவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட மணப்பாறை வணிகவரி அலுவலக CTO திரு.கோவிந்தசாமி மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (S.சேசு) 5.7.2023 Submitted to the Court of Hon,ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 08.30 hrs on 05.07.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.08/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 09.45 hrs on 05.07.2023. Sd.xxx (A.PRASANNAVENKATESH) 05.07.2023 Inspector of Police, V&AC, Trichy.

05/7/2023
Insp V&AC, Trichy.
[A.PRASANNA VENKATESH]